# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 179/மா/2025

நாள்:17.07.2026

B. சரவணன்
சென்னை–600 017 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–9
பெருநகர சென்னை மாநகராட்சி
(2) கட்டிட உரிமையாளர்,
கதவு எண் 20/2, 20/1B, 20/2B
ஆத்ரேயபுரம், சென்னை–600 014 --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 26.04.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.04.2025 அன்று பெறப்பட்டு 179/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவர் தனது 26.04.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையருக்கு முகவரியிட்டு அனுப்பியுள்ள 08.10.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் R.T.I. சட்ட ஆர்வலர். மேலும் நான் தெரிவிப்பது பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ள கட்டிட எண் 20/2, 20/1B, 20/2B வார்டு 109, ஆத்ரேயபுரம் மெயின் ரோடு, சூளைமேடு, சென்னை–94 என்கிற முகவரியில் புதியதாக 3 தளத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம். அதனை ஒட்டி தொடர்ச்சியாக உள்ள மூன்று கட்டிடங்கள் இக்கட்டித்தின் முன்புறம் உள்ளே மற்றும் வெளியே என அனைத்து கட்டிடத்தின் வாசல் முன்புற வழிகளும் மேடுகளாக படிகட்டுகள் அமைக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பினை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைபடங்களில் காணலாம். இதுபோல் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் குழந்தைகள் வயதானவர்கள் கர்பிணிகள் மாற்றுதிறனாளிகள் பார்வை குறைபாடு உள்ளவர்கள் என எவரும் மாநகராட்சிக்கு சொந்தமான பொது பாதையை பயன்படுத்த முடியவில்லை. நடைபாதையில் நடந்து செல்ல முடியாததால், சாலை வழியாக அனைத்து வாகனங்களும் செல்லகூடிய நடு சாலையை வேறு வழியின்றி மக்கள் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது இதனால் போக்குவரத்து நெரிசல்களும் மற்றும் வாகனத்தில் செல்வோருக்கு இடையூறு ஏற்படுகிறது. சில நேரங்களில் இதனால் விபத்துக்களும் நேரிடுகிறது. வரும் காலங்களில் இந்த ஆக்கிரமிப்பால் உயிர் சேதங்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

எனவே போர்கால அடிப்படையில் வீடியோ புகைப்பட ஆதாரங்களுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றி பதில் அளிக்க பொது நலன் கருதி இம்மனு அளிக்கப்படுகிறது.''

2. மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 03.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 08.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 23.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையர் தனது 06.07.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"முறையீட்டு மனு எண் 179/மா/2025–2 நாள் 23.06.2026 இல் கதவு எண் 20/1/B1, 20/B2 மற்றும் 20/20/C2 ஆத்ரேயபுரம் பிரதான சாலை, சூளைமேடு, சென்னை–94 என்ற முகவரியில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தின் முன்புறம் படிக்கட்டுகள் மற்றும் சாய்தளம் அமைத்து நடைபாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக திரு. பி. சரவணன் அவர்கள் புகார் அளித்திருந்தார்.

இதுகுறித்து தெரிவிப்பது யாதெனில், கதவு எண் 20/1/B1, 20/B2 மற்றும் 20/20/C2 ஆத்ரேயபுரம் பிரதான சாலை, சூளைமேடு, சென்னை–94 கட்டிடங்களின் சாய்தளம் மற்றும் படிக்கட்டுகள் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் உடைத்து அகற்றம் செய்யப்பட்டன என இதன் மூலம் தங்கள் மேலான பார்வைக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மேற்கண்ட இப்பதிலினை ஏற்றுக் கொள்ளுமாறு பணிந்து கேட்டுக் கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர் 08.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"சென்னை–94, சூளைமேடு, வார்டு எண் 109, ஆத்ரேயபுரம் மெயின் ரோட்டில் உள்ள கதவு எண் 20/2, 20/1B, 20/2B–ல் புதியதாக 3 தளத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் அதனை ஒட்டி தொடர்ச்சியாக உள்ள மூன்று கட்டிடங்கள் இக்கட்டித்தின் முன்புறம் உள்ளே மற்றும் வெளியே என அனைத்து கட்டிடத்தின் வாசல் முன்புற வழிகளும் மேடுகளாக ஆக்கிரமித்து படிகட்டுகள் (Steps & Ramp) அமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட இரண்டு கட்டிடங்களில் அரசு விதிப்படி நான்கு புறமும் இடைவெளி விடப்படவில்லை. மேலும் வாகனம் நிறுத்த பார்க்கிங் வசதி செய்யப்படவில்லை.

இதுபோல் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் குழந்தைகள் வயதானவர்கள் கர்பிணிகள் மாற்றுதிறனாளிகள் பார்வைகுறைபாடு உள்ளவர்கள் என எவரும் மாநகராட்சிக்கு சொந்தமான பொது பாதையை பயன்படுத்த முடியவில்லை நடைபாதையில் நடந்து செல்ல முடியாததால், சாலை வழியாக அனைத்து வாகனங்களும் செல்லகூடிய நடு சாலையை வேறு வழியின்றி மக்கள் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது இதனால் போக்குவரத்து நெரிசல்களும் மற்றும் வாகனத்தில் செல்வோர்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. சில நேரங்களில் இதனால் விபத்துக்களும் நேரிடுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள 3 கட்டிடங்களில் கதவு எண்கள்.20/2, 20/1B ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்படவில்லை. எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், அரசு விதிப்படி கட்டிடத்தின் நான்கு புறமும் இடைவெளி விடாமலும், பார்க்கிங் வசதி இல்லாமலும் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டிடங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், இரண்டு ஆண்டுகளாகியும் ஆக்கிரமிப்பு கட்டிடம் மீது தொடர் நடவடிக்கை எடுக்காமல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

**6.** முதல் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் **9–**ன் உதவிப் பொறியாளர் **08.07.2026** அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள புகார் தொடர்பாக சென்னை**–94,** சூளைமேடு, ஆத்ரேயபுரம் பிரதான சாலை, கதவு எண் **20/B1, 20/B2** மற்றும் **20/C2** ஆகிய கட்டிடங்களின் சாய்தளம் மற்றும் படிக்கட்டுகள் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் உடைத்து அகற்றம் செய்யப்பட்டன என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான புகைப்பட நகல்கள் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

மேலும், மேற்கண்ட கட்டிடங்களில் இடைவெளி இல்லாமலும், அக்கட்டிடங்களில் பார்க்கிங் வசதி இல்லாமலும் கட்டப்பட்டுள்ளதால் **2024**ம் வருடம் கட்டிடங்களின் உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

7. இரண்டாம் எதிர்மனுதாரர் **08.07.2026** அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

**8.** முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், முதல் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் **9–**ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை**–94,** சூளைமேடு, வார்டு எண் **109,** ஆத்ரேயபுரம் மெயின் ரோட்டில் உள்ள கதவு எண் **20/2, 20/1B, 20/2B**–ல் புதியதாக **3** தளத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் அதனை ஒட்டி தொடர்ச்சியாக உள்ள மூன்று கட்டிடங்களின் முன்புற வழிகளை ஆக்கிரமித்து மேடுகளாக படிகட்டுகள் (Steps & Ramp) அமைக்கப்பட்டுள்ளன என்பதும், இவ்வாக்கிரமிப்பால், பொதுமக்கள் எவரும் மாநகராட்சிக்கு சொந்தமான பொது பாதையான நடைபாதையை பயன்படுத்த முடியாமல், அனைத்து வாகனங்களும் செல்லகூடிய நடு சாலையை மக்கள் பயன்படுத்த வேண்டியுள்ளதால், போக்குவரத்து நெரிசல்களும் மற்றும் வாகனத்தில் செல்வோர்களுக்கு இடையூறும், விபத்துக்களும் ஏற்படுகிறது என்பதும், மேற்கண்ட இரண்டு கட்டிடங்களில் அரசு விதிப்படி நான்கு புறமும் இடைவெளி விடாமலும், வாகனம் நிறுத்த பார்க்கிங் வசதி இல்லாமலும் கட்டப்பட்டுள்ளது என்பதும், மேலே குறிப்பிட்டுள்ள 3 கட்டிடங்களில், இரண்டு கட்டிடங்கள் **20/2, 20/1B** முன்பு ஆக்கிரமிக்கப்பட்ட நடைபாதைகள் முழுமையாக அகற்றப்படவில்லை என்பதும், மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், அரசு விதிப்படி கட்டிடத்தின் நான்கு புறமும் இடைவெளி விடாமலும், பார்க்கிங் வசதி இல்லாமலும் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டிடங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் இரண்டு ஆண்டுகளாகியும் ஆக்கிரமிப்பு கட்டிடம் மீது தொடர் நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் **9**ன் அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை**–94,** சூளைமேடு, ஆத்ரேயபுரம் பிரதான சாலை, கதவு எண் **20/B1, 20/B2** மற்றும் **20/C2**–ல் உள்ள கட்டிடங்களின் முன்புறம் உள்ள சாலையின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்ட சாய்தளம் மற்றும் படிக்கட்டுகள் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் உடைத்து அகற்றப்பட்டது என்பதும், மேற்கண்ட கட்டிடங்களில் இடைவெளி இல்லாமலும் மற்றும் பார்க்கிங் வசதி இல்லாமலும் கட்டப்பட்டுள்ளதால், **2024**ம் ஆண்டே அக்கட்டிடங்களின் உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்பதும், இதன் தொடர்ச்சியாக உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் முதல் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் **9–**ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், சென்னை–94, சூளைமேடு, ஆத்ரேயபுரம் பிரதான சாலை, கதவு எண் 20/B1, 20/B2 மற்றும் 20/C2–ல் உள்ள கட்டிடங்களின் முன்புறம் உள்ள சாலையின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்ட சாய்தளம் மற்றும் படிக்கட்டுகள் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் உடைத்து அகற்றப்பட்டது என்றும், மேற்கண்ட கட்டிடங்களில் இடைவெளி இல்லாமலும் மற்றும் பார்க்கிங் வசதி இல்லாமலும் கட்டப்பட்டுள்ளதால், 2024ம் ஆண்டே அக்கட்டிடங்களின் உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் முதல் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், மேற்கண்ட கட்டிடங்களின் முன்புறம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்ட சாய்தளம் மற்றும் படிக்கட்டிகளை முழுமையாக அகற்றப்பட்டுள்ளதா என்பதை உதவி ஆணையர் நிலையில் உள்ள அலுவலர் கள ஆய்வு செய்து உறுதி செய்யுமாறும் மற்றும் மேற்கண்ட கட்டிடங்களின் நான்கு புறமும் இடைவெளி விடாமலும் மற்றும் பார்க்கிங் வசதி இல்லாமலும் கட்டப்பட்ட கட்டிடங்களின் மீது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கையினை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971ன் கீழும் மற்றும் விதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றங்கள் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி மேற்கொள்ளுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. B. சரவணன்,
கதவு எண் 1 , புது தெரு, தியாகராய நகர், சென்னை–600 017.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 4, 4வது குறுக்கு தெரு, லேக்வியூ ரோடு, நுங்கம்பாக்கம்,
சென்னை–600 034.

(4) கட்டிட உரிமையாளர்,
கதவு எண் 20/B1, 20/B2 மற்றும் 20/C2,
ஆத்ரேயபுரம், சூளைமேடு, சென்னை–600 094.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல் :</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032